# கிருபையுள்ள வார்த்தை ®

KIRUBAIYULLA VAARTHAI

Vol - 16 | October அக்டோபர் | 2015

ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-


## நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்.

யோசுவா 24:15



J.C. ஆத்தும ஆதாய பயிற்சிப் பள்ளி 6வது பட்டமளிப்பு விழா (திண்டுக்கல்)


கௌரவ ஆசிரியர் **Betty Choate** ஆசிரியர் **பிலேமோன் ராஜா**

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| பெற்றோருக்கான தேவனுடைய... | 3 |
| நமது குடும்பத்தில் அதிகாரம் | 8 |
| காணாமற்போன நிலை | 10 |
| நியாயதிபதிகள், ரூத் | 13 |
| நாம் முற்றிலும் வெற்றி... | 15 |
| சிறுவர் பகுதி | 18 |



*In memory of* J.C. CHOATE

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**



ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா,** M.S. (I.T.& M.)., M.Th.,

**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D.,

**C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,

**R. ஆண்டனி ராஜா,** D.Th.,

சட்ட ஆலோசகர் : **M. முரளி** B.A.,B.L.


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

வாசகர்கள் கவனத்திற்கு...

**புதுயுகம்** T.V. **யில்**

செவ்வாய் காலை - 6.15 மணிக்கு கிருபையுள்ள வார்த்தை நிகழ்ச்சியினை காணத்தவறாதீர்.

**தமிழன்** T.V. **யில்**

**ஞாயிறு** காலை 6-45 மணி

பாருங்கள் ! பயன் அடையுங்கள் !


செய்தியாளர்கள்:

போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)


## இலவசம் ! இலவசம் !




கிருபையுள்ள வார்த்தை வாசகர்களே! எமது புதிய வெளியீடான, நமது ஆசிரியரின் TV செய்திகள் அடங்கிய **"பிரசங்க குறிப்புகள்"** புத்தகத்தினை இலவச பரிசாக பெற்றுக் கொள்ள, உங்களது தெளிவான முகவரி, தொலைபேசி எண் மற்றும் பதிவு எண்ணுடன் எங்களுக்கு ஒரு தபால் அட்டையில் எழுதி அனுப்புங்கள்! SMS மூலமாகவும் விபரங்களை எங்களுக்கு அனுப்பலாம்.

போன்
92 4421 4421, 924431 4431, 9791760010


குறிப்பு : தபால் செலவு உங்களுடையது !

முந்தி வரும் தொடர்புகளுக்கே முன்னுரிமை அளிக்கப்படும் !

**கிருபையுள்ள வார்த்தை**

**"குடும்பங்களை காக்கும் கரிசனையுள்ள வார்த்தை"**


World Literature Publication
Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India


Send Postal Expenses only and receive The Voice of Truth Intl. Vol.85

# பெற்றோருக்கான தேவனுடைய திட்டம் (பிள்ளைகளை நேர்த்தியாக வளர்க்க)

P.C. பிலேமோன் ராஜா
ஆசிரியர்
கிருபையுள்ள வார்த்தை



கிறிஸ்துவின் கிருபையுள்ள வார்த்தையின் மீது தாகம் கொண்ட அன்பு வாசகர்களாகிய உங்கள் அனைவருக்கும், மீட்பர் இயேசுவின் நாமத்தினாலே எனது வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்.

இன்றைய நாட்களில் பிள்ளைகளை நேர்த்தியாக வளர்ப்பது என்பது, நமக்கு பிரசவ வேதனையைப் போல கொடியதாகயிருக்கிறது. சர்வவல்ல தேவன் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறவரானபடியினால், பிள்ளை வளர்ப்பு பற்றி தமது திட்டத்தை மோசேயின் மூலமாக 3500 ஆண்டுகளுக்கு முன்பே வெளிப்படுத்தியிருந்தார். **உபாகமம் 6:4–9** வசனப்பகுதியில் அதை அவர் நமக்கு தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து கானானிற்கு வந்தபிறகு, அவர்கள் தங்கள் பிள்ளைகளை விக்கிரகாராதனை மற்றும் பாவம் நிறைந்த சமூகத்திலே, அவர்களை தேவபக்தியுள்ள ஒழுக்கமானவர்களாக வளர்ப்பது என்பது அவர்களுக்கான மிகப்பெரிய சவாலாக இருந்தது. இஸ்ரவேல்(கானான்) வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசம் என்றழைக்கப்பட்டது என்பதை தவிர, தேவனற்ற மக்களால் சீரழிந்திருந்தது.

இஸ்ரவேல் ஏற்கனவே ஒரு தலைமுறையை வனாந்தரத்தில் இழந்திருந்தது. ஆகையால் அவர்கள் யாரை விசுவாசிக்க வேண்டும்? மற்றும் அவர்கள் என்ன செய்ய வேண்டும்? என்பதைப் பற்றி மோசேயின் மூலமாக தேவன் அவர்களிடத்தில் பேசினார். ஏனெனில் அந்நாட்டு மக்களின் வாழ்வு புறஜாதி பாணியினால் பிடிக்கப்பட்டுப் போய்விடக் கூடிய அபாயம் உள்ளது.



வசனம் 4 மற்றும் 9ல் உள்ள “கேள்” என்ற “ஷேமா” வார்த்தையின் பொருள் என்பது, அவர்களை ஆராதனைக்கு அழைத்தல், யுத்தக்கூக்குரல் மற்றும் மரிக்கும் வேளையில் செய்யும் ஜெபத்தை போன்று, உடனடியாக செய்ய வேண்டியவைகளை மிகவும் கவனத்துடன் கேட்க வேண்டியதாயிருந்தது.

இது பெற்றோர்களுக்கான தேவனுடைய திட்டமாயினும், இது கூட்டு முயற்சியாகையால், தாத்தா பாட்டிகளுக்கும் உரியதாயிருக்கிறது. ஏனெனில், குடும்பம் என்பது எதிர்காலத் தலைமுறைகளுக்குப் போதிப்பதற்கென்று ஏற்படுத்தப்பட்ட தேவனுடைய முதல்நிலை முகவராக இருக்கிறது **(உபா 6:4–9).**

ஆகையால், பிள்ளை வளர்ப்பு பற்றிய தேவனுடைய திட்டமாகிய இந்த பாடத்தை தாத்தா பாட்டிகளும், பெற்றோர்களும், மற்றும் எதிர்காலத்தில் பெற்றோராக ஆகப்போகிறவர்களும் மிகவும் கவனத்துடன் தியானம் செய்வோம்.

## 1. தேவனுடைய வழியை நம்புங்கள்

**உபா 6:4–6** *“இஸ்ரவேலே, கேள் : நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக. இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது.”*

பெற்றோர்த்துவத்திற்கான (பிள்ளை வளர்ப்பு) தேவனுடைய திட்டமானது மாம்ச ரீதியான வலியுறுத்தத்துடன் அல்ல, ஆனால் ஆவிக்குரிய வலியுறுத்தத்துடன் தொடங்குகிறது.

பெற்றோர்த்துவத்திற்கான தேவனுடைய திட்டமானது, அவர்கள் இருக்க வேண்டிய பிரகாரம் இருக்கின்ற பெற்றோர்களுடன் துவங்குகின்றது. “இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள், உன் இருதயத்தில் இருக்கக்கடவது” (வசனம் 6).

நல்ல பெற்றோர்த்துவத்திற்கு, சரியான வகை நபராயிருப்பதற்காக சரியான நுணுக்கங்களை கற்றுக்கொள்ளுதல் என்பது திறவுகோலாக இருப்பதில்லை. நல்ல பெற்றோர்த்துவம் என்பது வாழ்வுப்பணியில் இருந்து வளருகிறது. நமக்கு அது நடக்காத வரைக்கும் நம் மூலமாக எதுவும் நடக்காது. போலி நடிப்புக்காரர் நல்ல பெற்றோர்கள் ஆவதில்லை. ஆகையால் நாம் செயல்படக்கூடிய உண்மையானவர்களாக, மெய்யானவர்களாக இருக்க வேண்டும். நமது பிள்ளைகள் மீது சரியான வழியில் செல்வாக்கு செலுத்த, முதலில் நாம் இருக்க வேண்டிய பிரகாரம் இருக்க வேண்டும்; அதாவது முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

### பெற்றோர்களுக்கு இருக்க வேண்டிய இரண்டு இன்றியமையாத விஷயங்கள்

**முதலாவது,** நாம் நம்மிடம் இருக்கும் எல்லாவற்றுடன் தேவனிடத்தில் அன்புக்கூற வேண்டும் (வசனம் 5). நாம் நமது முழு இருதயத்துடனும் (நமது உணர்வுகள் மற்றும் சிந்தைகள்), முழு ஆத்துமாவுடனும் (நமது வாழ்வு மற்றும் நம்முடையவைகள்), முழு பெலத்துடனும் (நமது பெலம் மற்றும் நடவடிக்கைகள்) அவர் மீது அன்புகூர வேண்டும்.

**இரண்டாவது,** நமது பிள்ளைகளுக்கு போதிப்பதற்கு, நாம் தேவனுடைய வசனத்தை நமது இருதயங்களுக்கு “உள்ளேயும்” மற்றும் இருதயங்களின் “மீதும்” கொண்டிருக்க வேண்டும் (வசனம் 6). தேவனுடைய வசனத்தை நமது இருதயங்களின் “உள்ளே” கொண்டிருப்பதற்கு நாம் அதை வாசித்து, படித்து, தியானித்து, மனப்பாடம் செய்து, நாம் அதை நம் வாழ்வின் அங்கமாக்கிக்கொள்ள வேண்டும்.

நாம் இருக்க வேண்டிய பிரகாரம் இருப்பதால் தான் நாம் செய்கின்றவைகளைச் செய்கிறோம். நாம் இருக்க வேண்டிய பிரகாரம்இருப்பதற்கு காரணம், நாம் நம்புகின்ற விஷயங்கள் தான்.

### 2. தேவனுடைய வழியை போதியுங்கள்

**உபாகமம் 6:7** ‘‘நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிற போதும், படுத்துக்கொள்ளுகிற போதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப்பேசி,”

நமது பிள்ளைகள் தேவனை பற்றியும் அவரது வழியைப் பற்றியும் தாமாகவே அறிந்து கொள்ளமாட்டார்கள். அவர்களுக்கு போதிக்கப்பட வேண்டும். அவர்களை சுற்றிலும் உள்ள உலகத்தைப் பற்றிய பல உண்மைகள் போதிக்கப்பட வேண்டும். நெருப்பு சுடுகிறது, கண்ணாடி உடைந்து போகும், மற்றும் மண்ணிலிருந்து பிடுங்கப்பட்ட செடிகள் மடிந்துப் போகும் என்று போதிப்பது போலவே, தேவனுடைய சத்தியங்களும் அவர்களுக்கு போதிக்கப்பட வேண்டும்.



பிள்ளைகளுடைய சிந்தைகளில் தேவனுடைய வசனம் கூர்மையாக்கப்பட, தெளிவாக்கப்பட வேண்டும். அவர்களின் ஆத்துமாக்கள் அதன் சத்தியத்தினால் ஊடுருவப்பட வேண்டும். **எபி 4:12** “தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும்

யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது."

அப் 2:37 "இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து; சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள்." உலகமானது நமது பிள்ளைகளின் சிந்தைகளையும் இருதயங்களையும் அபகரித்துக்கொள்வதற்கு உக்கிரத்துடன் தன்னை ஒப்புக்கொடுத்திருக்கிறது. நாம் கிறிஸ்துவின் போதனைகளை போதிப்பதில், இதை காட்டிலும் அதிக உக்கிரமாய் இருக்க வேண்டும்.

நாம் நமது பிள்ளைகளின் வேதாகம அறிவை பெருக்குவதற்கு இருக்கின்ற ஒவ்வொரு ஆதாரத்தையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உதாரணமாக, வேதாகம வகுப்பு (பைபிள் ஸ்டடி) மற்றும் சபையின் கூடுகை ஒவ்வொன்றிலும், ஆராதனை மற்றும் ஊழியம் ஒவ்வொன்றிலும், நம் பிள்ளைகள் பங்கு பெறுவதை நாம் உறுதிப்படுத்தி, ஊக்கப்படுத்த வேண்டும்.

தினசரி குடும்பமாக ஜெபம் செய்வது மட்டுமல்ல, வேதாகமத்தை குடும்பமாக ஆராய்ந்து தியானிப்பது என்பது, நாம் அந்த போதனையைச் செய்யக்கூடிய ஒரு வழிமுறையாக உள்ளது. இருப்பினும் திட்டமிட்ட வேளைகளில் மட்டும் போதித்தல் என்றில்லாமல், எல்லா வேளைகளிலும் போதித்தல் என்பதே நமது குறிக்கோளாக இருக்க வேண்டும். நீ அவைகளை உன் பிள்ளைகளுக்கு கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிற போதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிற போதும் அவைகளைக் குறித்துப் பேசி", (வசனம் 7)



வழியில் நடக்கிற போதும், நாம் நடந்து பயணம் சென்றாலும், காரிலோ அல்லது வேறு ஏதேனும் வாகனத்திலோ பயணம் சென்றாலும், நமது பயண நேரம், நமது விசுவாசத்தை பகிர்ந்தளிக்கும் நேரமாக இருக்கட்டும். இதை இன்னொரு வகையிலும் நடைமுறைப்படுத்த, நாம் நோயாளிகளுக்கு உணவு எடுத்துச்செல்லும் போதும், துக்கத்தில் விடப்பட்டவர்களை பார்க்கச் செல்லும் போதும் நம்முடைய பிள்ளைகளையும் அழைத்துச் செல்ல வேண்டும்.

படுத்துக்கொள்ளுகிற போதும், படுக்கை வேளை என்பது பல பிள்ளைகளுக்கு சிறப்பான வேளையாக இருக்கிறது. அந்த வேளையில் அவர்கள் குறிப்பாக போதித்தலுக்கும், கலந்துரையாடலுக்கும் திறந்த மனதுடன் இருப்பார்கள். அது ஒரு மென்மையான தருணமாக இருக்கக்கூடும்.




எழுந்திருக்கிற போதும், நாம் காலையிலும், காலை உணவு வேளையிலும் போதிக்கும்படி அறைகூவல் விடப்படுகின்றது. இது ஒவ்வொரு புதிய நாளையும் எவ்வாறு தொடங்குவது என்று பிள்ளைகளக்கு போதிப்பதற்கு மிகச்சிறந்த வேளையாக உள்ளது.

பெற்றோர் எந்த வேளையிலும் மற்றும் எல்லா வேளையிலும் போதிக்க வேண்டும் என்பதே உபாகமம் 6:4–9 வசனங்களின் கொள்கையாக (கட்டளையாக) உள்ளது. நமது இருதயங்களில் நாம் கொண்டுள்ள விசுவாசத்தையும், அன்பையும் நமது பிள்ளைகளுடன் பகிர்ந்துகொள்வதற்குச் சாத்தியமான ஒவ்வொரு நிமிடத்தையும் நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

நமது வாழ்வானது மதம், வேலை, விளையாட்டு மற்றும் இன்னும் பிற விஷயங்களாக பிரிந்திருக்க கூடாது. மாறாக "நமது போதனையானது நமது

அன்றாட வாழ்வு என்ற துணியில் நெய்யப்பட்டதாக இருக்க வேண்டும்." ஏனெனில் எந்த நிகழ்ச்சியும், நிமிடமும், இடமும் வசனத்தை பகிர்ந்துக்கொள்வதற்கு ஒரு வாய்ப்பை அளிக்கக்கூடும். ஆகையால், நாம் நமது பிள்ளைகளுடன் இருக்கையில் 'போதிக்கக்கூடிய தருணங்களுக்காக' கவனமாக காத்திருக்க வேண்டும். அவர்களுக்கு போதிக்கும்படி எப்பொழுதும் ஆயத்தமாக இருக்க வேண்டும். அவர்கள் கற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்கையில், அதிகமாக கற்றுக்கொள்வார்கள்.

ஒரு அப்பா தன் மகனுடன் அவரது தோட்டத்தில் வேலை செய்துக்கொண்டிருந்தார். அப்பொழுது மகன் "அப்பா, தேவன் களைகளைச் சிருஷ்டித்தாரா?'' என்று கேட்டான். அப்பா சாதரணமாக பதிலளித்துவிட்டு, வேலையை தொடர முயன்றார். ஆயினும் பிறகு அவர், இந்த தருணம் ஒரு ஆவிக்குரிய பாடத்தை போதிப்பதற்கான வாய்ப்பாக இருந்ததை உணர்ந்தார். "மகனே, ஆதாம் ஏவாள் என்பவர்கள் தான் இந்த பூமியில் வாழ்ந்த முதல மனிதர்களாய் இருந்தனர். தேவன் அவர்களை களைகள் இல்லாத ஒரு அழகிய தோட்டத்தில் தான் வைத்திருந்தார். பின்பு ஒருநாள் பிசாசானவன் வந்தான்; அவன் ஆதாமையும் ஏவாளையும் தேவனுக்கு கீழ்ப்படியாமல் போகும்படி கூறினான்; அவர்கள் உண்ண கூடாது என்று தேவன் சொன்ன கனியை, உண்ணும்படி கூறினான். அவர்களும் அதை உண்டார்கள். பின்புதான் உலகத்தில் பிரச்சனைகள் தொடங்கிற்று; பூமியில் களைகள் முளைக்கத் தொடங்கின" என்றார். இதைக்




கேட்ட மகன் அப்பா! ''சாத்தான் மிகவும் மோசமானவன், அவனே களைகள் தோன்றக் காரணம்" என்று பதிலளித்தான்.

பிரியமானவர்களே! அநேக பெற்றோர், இப்படி, பிள்ளைகளுக்கு ஆசீர்வாதமான ஆவிக்குரிய காரியங்களை, அவர்கள் எளிமையாக ஏற்றுக்கொள்ளும் தருணங்களை உலக அழுத்தங்களில் சிக்கிக் கொண்டு வீணடித்துவிட்டு, பிற்காலங்களில் சிரமப்பட்டு சொல்லிக் கொடுக்க வீணடித்துவிட்டு, பிற்காலங்களில் சிரமப்பட்டு சொல்லிக் கொடுக்க விரும்பியும் பலனில்லாமல் போவதால் வேதனைப்படுகிறார்கள்.

நமது பிள்ளைகள் எப்போது கேள்வி கேட்பார்கள், எப்போது கற்றுக்கொள்ள ஆயத்தமாகவும், ஆர்வத்துடனும் இருப்பார்கள் என்று நாம் அனுமானம் செய்ய முடியாது. ஆயினும் நாம் நமது பிள்ளைகளுக்கு எப்பொழுதும் போதிக்க கூடியவர்களாக இருக்க வேண்டும். எந்த நேரத்திலும் வசனத்தை போதிக்க நாம் ஆயத்தமானவர்களாக இருக்க வேண்டுமானால், முதலாவதாக நாம் வசனத்தை படித்து, அதை மனதிலே வைத்திருக்க பழக வேண்டும்.

### 3. தேவனுடைய வழியை வாழ்ந்து அவர்களுக்கு காண்பியுங்கள்!

**உபாகமம் 6:8,9** *''அவைகளை உன் கையின்மேல் அடையாளமாகக் கட்டிக்கொள்வாயாக; அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக்குறியாய் இருக்கக் கடவது. அவைகளை உன் வீட்டு நிலைகளிலும், உன் வாசல்களிலும் எழுதுவாயாக.''*

வேதவசனங்களை சிறிய அல்லது பெரிய எழுதப்பட்ட பலகைகளாக வீட்டிலே மாட்டிவைப்பதும், அல்லது சிறிய வசன துண்டு அட்டைகளை சட்டை பைக்குள்ளோ, தங்களது கைப்பைகளுக்குள்ளோ

வைத்திருக்கின்ற பழக்கம் நல்லது தான். ஆயினும் பிள்ளைகள் நாம் வாழ்பவற்றையேக் கற்றுக்



கொள்கின்றனர். நம் வாழ்வு நமது பிள்ளைகளின் வாழ்வில் செல்வாக்கு நாம் எப்படிப்பட்ட வாழ்வு வாழ்கிறோம் என்பதை பொருத்தே உள்ளதாக உள்ளது. ஆனால் அந்த செல்வாக்கு அவர்களை நன்மைக்கோ அல்லது தீமைக்கோ தொடர்ந்து வழிநடத்தும் என்பதை நாம் அறிய வேண்டும்.


**யாத் 20:4,5** *“மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்.”*

இங்கே, மூன்றாம் நான்காம் தலைமுறைபிள்ளைகள் அவர்களுடைய பிதாக்களின் பாவங்களுக்காக தண்டிக்கப்படுவார்கள் என்று தேவன் கூறியது ஏன்? ஏனென்றால் அவ்வளவு வரைக்கும் ஒரு பெற்றோரின் செல்வாக்கு ஒழியாதிருக்கிறது. ஆபிரகாம் தன் உயிரை காத்துக்கொள்ள பொய் சொன்னார் **(ஆதி 12:10–13, 20:1–5),** அவரின் மகன் ஈசாக்கும் அதே போன்ற பொய்யை சொன்னார் **(ஆதி 26:6–1),** ஆபிரகாமின் பேரப்பிள்ளைகளில் (மூன்றாம் தலைமுறை) ஒருவனாகிய யாக்கோபு பொய் சொல்லி வஞ்சிக்கிறவனாக இருந்தான் (ஆதி 27:1-19). யாக்கோபு முதிர்வயதான போது அவரது மகன்கள் (ஆபிரகாமின் நான்காம் தலைமுறை) அவர்கள் தந்தையினிடத்தில் பொய்கூறி அவரையே வஞ்சித்தனர் **(ஆதி 37).**

நீங்கள் எப்படிப்பட்ட பெற்றோராராக உங்கள் பிள்ளைகளின் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறீர்கள். “நான் தான் வீணாக போய்விட்டேன் நீயாவது ஒழுக்கமாயிரு’’ என்று வெறுமனே போதிப்பவர்களாகவா? அல்லது “என்னைப் பார் நான் எவ்வாறு கர்த்தருக்கு பிரியமாக நடந்துக்கொண்டேனோ, அதுபோல் நீயும் நட” என வாழ்வையே போதனையாக கொடுக்கப்போகிறோமா? சிந்திப்போம்!

இறுதியாக, பிரியமானவர்களே! நமது பிள்ளைகள் தேவனுடைய வழியை பின்பற்ற வேண்டும் என்று விரும்பினால், தேவனுடைய வழியை நாம் நம்பி, அதைப் போதித்து, அதை வாழ்ந்துக்காண்பிக்க வேண்டும் என்றே **உபாகமம் 6:4–9** போதிக்கிறது. பெற்றோர்கள் சீரான வாழ்வை, உண்மையான மற்றும் மெய்யான கிறிஸ்தவ வாழ்வை வாழ்வது அவசியம். அது நமது பிள்ளைகள் “கோணலும் மாறுபாடான சந்ததியின் நடுவில், அவர்களை சுடர்களாக (பிலி 2:15) இருக்கத் தூண்டும். ஒவ்வொரு பெற்றோருடனும் தேவன் இருப்பாராக!.

**– அன்புடன், ஆசிரியர்**



# நமது குடும்பத்தில் அதிகாரம் !

## Authority in our Family !

நம்முடைய காலத்தின் மிக மோசமான நிலையில் ஒன்று, குடும்பங்கள் தொடர்ந்து மரித்துக் கொண்டே இருப்பது தான். திருமண உறவில் உண்மையில்லாமை, பாலியல் பாவங்கள், ஓரினச்சேர்க்கை, கருக்கலைப்பு, பெண்களுக்கான அளவுக்கு அதிகமான சுதந்திரம், ஆண்களின் ஒழுக்கக்கேடான வாழ்வு, திருமணத்தை தவிர்த்தல் போன்றவை நம்முடைய குடும்பங்கள் சாவதற்கு காரணமானவைகளாக உள்ளன.

ஆணும் – ஆணும், பெண்ணும் – பெண்ணும் தாங்கள் திருமணம் செய்து கொள்ள உரிமை கோருகின்றனர், மேலும் அநேக நாடுகள் இதை இப்பொழுது அங்கீகரிக்க துவங்கியுள்ளன. உறவுகளுக்கான ஒரு சரியான அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளாமல், மக்கள் அர்த்தமுள்ள உறவுகளை தேடுகிறார்கள்.

### திருமணம் மற்றும் குடும்பங்களுக்கான தேவனுடைய திட்டம்:

திருமணம் என்றால், ஆணும் பெண்ணும் ஆகிய இருவரும் திருமண பந்தத்திற்குள்(ஒப்பந்தம்) வந்து சேர்ந்து வாழ்வதாகும். அவர்கள் இல்லறத்தை ஆசீர்வதிக்க பிள்ளைகள் வரலாம், வராமலும் இருக்கலாம். மேலும், வீடு என்பது, ஒரு குடும்பம் சந்தோஷமாக வாழும் இடமாகும். ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் இருக்கும் உறவுகள் தேவனை திருப்திப்படுத்தும் விதமாக இருப்பார்கள்.

அருமையானவர்களே ! ஒரு மனிதனின் வாழ்நாளின் ஒவ்வொரு வருடத்திற்கும், அதாவது தொட்டில் முதல் கல்லறை வரையிலும், மேலும் வாழ்வின் ஒவ்வொரு தேவைகளுக்கும் வேதாகமத்தில் ஆலோசனைகள் உள்ளன.

### தேவனுடைய திட்டம் [முறை] என்ன?


திட்டம் / முறை / வடிவம் என்பது அதைப்போன்றே மற்றொன்றை உருவாக்க உதவுவதாகும்; அதாவது ஒன்றை நகல் எடுக்கவோ, பிரதிபலிக்கவோ வேண்டும். மனிதன் தன்னுடைய வழியை நடத்துவது அவனுக்கு கூடாத காரியமாகும் **(எரே 10:23).** அதனால், இந்த விஷயத்தில் மட்டுமல்ல, மற்ற எல்லா விஷயங்களிலும் தேவன் மனிதனுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் தன்னுடைய வசனத்தின் மூலம் கொடுத்துள்ளார் **(2 தீமோ 3:16,17:2 பேதுரு 1:3).** எப்பொழுதுமே தேவன், தான் கொடுக்கும் மாதிரியின்படி அப்படியே பின்பற்றப்பட வேண்டும் என விரும்புகிறார். அது மோசே கூடாரம் அமைப்பதிலும் சரி, நோவா பேழையைக் கட்டுவதிலும் சரி, பொருந்தும் **(ஆதி 6:22: எபி8:5).** ஆகையால் மனிதன், தெய்வீக மாதிரியின்படியே குடும்பத்தையும் கட்ட வேண்டும்.


### திருமணத்திற்கான தேவனுடைய மாதிரி:

1. அது தெய்வீக ஆரம்பமுடையது, யாவருக்குள்ளும் கனமுடையது, **ஆதி. 2:24: எபி13:4**

2. ஒருவனுக்கு ஒருத்தி என்ற அடிப்படையில் மட்டுமே, அதாவது ஒரு சமயத்தில் ஒரு நபர் ஒரே ஒரு வசனத்தின்படியான துணையை மட்டுமே கொண்டிருக்க முடியும் **ஆதி 2:24.**

3. உருவாக்ககதிலேயே(படைப்பிலேயே) ஒன்றிணைந்தவர்கள். இது "ஆணிலிருந்து பெண் படைக்கப்பட்டார்'' என்ற கருத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது.






4. அவர்கள் இருவரும் ஒரே மாம்சமானார்கள், (மத்19:5,6: 1பேதுரு 3:7) வடிவமைப்பிலேயே பலுகிப்பெருகும் வண்ணமாக படைக்கப்பட்டவர்கள் – ஆதி 1:28; அப் 17:26.

5. கணவனும், மனைவியும் சார்ந்து இருக்க வாழ்வில் ஒருவருக்கொருவர் கடமைப்பட்டுள்ளனர். – ஆதி :2:21–24. உயிரியில் ரீதியாக, சமுதாய ரீதியாக, ஆவிக்குரிய வகையில் மற்றும் குழந்தை பெறும்படியான காரியங்களில் தனிநபராக ஆணும் பெண்ணும் முழுமையற்றவர்கள்.

6. ஆண்களின் தலைமையில் வழிநடத்தப்படும் ஆளுகை அமைப்பை உடையது. தெய்வீக நிபந்தனைகளின்படி, மனைவி கணவனுக்கு துணையாக இருக்கிறாள், 1 தீமோ 2:13: ஆதி 2:21–23: எபே 5:23–24.

7. குடும்பத்திலேயே ஆவிக்குரிய காரியங்களின் பிரதிபலிப்புகள் இருந்தன. எபிரெய குடும்பங்கள் மதசம்பந்தமான காரியங்களினால் பலம் பெற்றிருந்தது. குடும்ப பலிபீடங்களில் தகப்பன், ஒரு ஆசாரியனாகவும் இருந்து கர்த்தருடைய வார்த்தையை நேர்த்தியாக கற்றுக்கொடுத்தார். – உபா 6:7: 11:18–22:சங் 78:4: நீதி 22:6.

8. இயற்கையிலேயே திருமண உறவு அழியாத்தன்மையுடையது. இது ஆரம்பம் முதலே போதிக்கப்பட்டுள்ளது – ஆதி 2:24: மத் 19:6 மரணத்தினால் அல்லது விபச்சாரத்தினால் உடையலாமே ஒழிய, மற்றபடி இறுதியானது.

## மேலும் உங்களின் சிந்தனைக்கு....

### I. திருமணத்தின் நோக்கம் :

1. துணையை ஏற்படுத்த. – ஆதி 2:18.
2. சந்ததியை பெருக்க. – ஆதி 1:25
3. ஒழுக்கமற்ற வாழ்வை தடுக்க – 1 கொரி 7:2: எபி 13 :14: நீதி 5:18–21.
4. வேலைவாய்ப்புகளை கொடுக்க – 1 தீமோ 5:13,14 நீதி 31:10–31.


### II. திருமணத்தில் உள்ளடங்கியவை :

1. தகப்பனையும் தாயையும் விட்டுபிரிதல். ஆதி 2:24;மத் 19:5; எபே 5:31.
2. துணையுடன் சேர்ந்தே இருத்தல் – ஆதி2:24
3. ஒரே மாம்சமாதல்.

### III. கீழ்காணும் வேதாகமத்து உண்மைகளினால், திருமணம் என்பது ஒருவர் மற்ற ஒருவருடன் மட்டுமே கொள்ளும் உறவு என காண்கிறோம்.

1. ஆரம்பத்திலேயே, ஒரு மனிதனுக்கு ஒரு பெண் மட்டுமே படைக்கப்பட்டார். ஆதி 2:18–23.
2. 'ஒரு மனிதனுக்கு ஒரு மனைவி என்று மட்டுமே ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்டது. ஆதி 2:24.
3. 'ஒரு மனிதனுக்கு ஒரு மனைவி' என்பதையே கிறிஸ்து அங்கீகரித்தார். மத் 19:4–5.
4. 'ஒரு மனிதனுக்கு ஒரு மனைவி' என்று மட்டுமே பவுலினால் அங்கீகரிக்கப்பட்டது. 1 கொரி 7:2.
5. மூப்பர்களும் , உதவிக்காரர்களும் ஒரு மனைவி இருப்பதினாலேயே அந்நிலையை அடைய முடியும், 1 தீமோ 3:2,12.
6. ஒரே கணவனுடன் வாழ்ந்த விதவைகளுக்கு மட்டுமே சபையானது உதவ முடியும். – 1 தீமோ 5:9.
7. பல திருமணம் செய்தவர், வேதாகமத்தினால் விபசாரம் செய்தவராக குறிப்பிடப்படுகிறது. – ரோ 7:3.

- SAJU GEORGE (Kerala)



### சத்திய வழி – வானொலி செய்திகள்

# காணாமற்போன நிலை (Lost State)

- சகோ. P.R. சாமி
(பெங்களூரு)



அன்புள்ள தேவன், மனிதனை தம்முடைய சாயலின்படி தம் சொந்த சுபாவத்துக்கு பங்குள்ளவனாகப் படைத்தார். அவனுக்கு ஏற்ற துணையையும் சிருஷ்டித்து, இருவரையும் அழகிய ஏதேன் தோட்டத்தில் விட்டு, அவர்கள் சந்தோஷமாக இருக்கத் தேவையான சகலத்தையும் கொடுத்திருந்தார். தேவன் மனிதனை கட்டாயப்படுத்தாமல், மனிதன் தானாக முன்வந்து, தம்மை நேசிக்கவும், சேவிக்கவும்தக்கதாக சுயமாக தேர்ந்தெடுத்து செயலாற்றும் சுதந்திரத்தையும் கொடுத்திருந்தார். சுதந்திரம் எங்கு கொடுக்கப்படுகிறதோ, சுதந்திரத்தை மீறும் அபாயமும் அங்கு இருக்கும். மனிதன் பிசாசினால் இழுக்கப்பட்டு, சோதிக்கப்பட்டு, தன் சுதந்திரத்தை உபயோகித்து, தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல் போனான். விலக்கப்பட்ட கனியை புசித்து தேவனுக்கு விரோதமானான். தேவனுடைய கட்டளைகளை மீறுவதே பாவம் என்று பார்க்கிறோம். தேவன் விதித்த எல்லைக்கோட்டை தாண்டுவது, குறியிலிருந்து தவறுதல் என்றும் பொருள் கொள்ளலாம். *“பாவஞ்செய்த தேவதூதர்களைத் தேவன் தப்ப விடாமல் அந்தகார சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்தார்”* **(2 பேது 2:4)** என்று வேதம் கூறுகிறது. அப்படியானால், தேவனுடைய அதிகாரத்தை, கட்டளையை மீறி கலகம் செய்யும் ஒவ்வொருவருடைய நிலை இதுவாகத்தான் இருக்க வேண்டும் என்று தோன்றுகிறதல்லவா? மனிதனின் வீழ்ச்சியிலே, அவனை கைவிட்டு விட அப்படிப்பட்ட கல் நெஞ்சன் அல்ல நம் தேவன். தேவன் மனிதனை நேசித்தார். அவன் விழுந்த நிலையிலும் அவன் மேல் அன்பு பாராட்டினார். மனிதன் விழுந்த அதே இடத்திலே, ஏதேன் தோட்டத்திலே, அவனுக்கு ஒரு நம்பிக்கைகான வாக்குதத்தத்தைக் கொடுத்தார். சர்ப்பம் ரூபத்தில் வந்த பிசாசைப்பார்த்து, *“உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும், அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன். அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்”* **(ஆதி 3:15)** என்றார். ஸ்திரீயின் வித்தாக வர இருந்த தம் குமாரனைப் பற்றிய வாக்குத்தத்தத்தை அன்று கொடுத்தார். ஆம், கிறிஸ்து சாத்தானை மடங்கடித்தார். தலையை நசுக்கினார். அதாவது, அந்த பனியில் சாத்தான் அவர் குதிங்காலை நசுக்கினான். அவர் கொடூர மரணத்தை சிலுவையில் அடைந்தார். இதைத்தான் பவுலும், கிறிஸ்துவுக்குள்ளான இந்த மீட்பு, தேவனுடைய அநாதி தீர்மானம் என்கிறார். உலகத்தோற்றத்திற்கு முன்பே தேவன் இந்த திட்டத்தின் மூலம் நம்மை முன் குறித்திருக்கிறார் என்றார்.

மனிதனுடைய இரட்சிப்பின் திட்டத்தில், ரத்தஞ் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பு இல்லை என்பதை மூதாதையார் யுகத்திலும், மோசேயின் யுகத்திலும், மிருகங்களை பலியிடுவதன் மூலம் மக்களுக்கு உணர்த்தி இருக்கிறார். இந்த பலிகள், தேவ ஆட்டுக்குட்டியான கிறிஸ்து ஒரே தரம் மரித்து தம் புனித ரத்தத்தை சிந்தி, மீட்பை கொடுக்கும் வரை அனுமதிக்கப்பட்டது. நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காக பாவமாக்கினார் என்று கொரிந்தியருக்கு எழுதின போது பவுல் குறிப்பிடுகிறார். தேவனுடைய எல்லையில்லா அன்பை நாம் என்ன சொல்வது! தம்முடைய ஒரே பேரான குமாரனை இந்தக் கொடுமையான மக்களின் ரட்சிப்புக்காக தத்தம் செய்த விந்தை என்ன? *“நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது. நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையிலே கிறிஸ்து மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணினார்”* **(ரோ 5:7,8)** என்றார் பவுல்.

பாவியான மனுஷன் தேவனோடு ஒப்புரவாக்கப்பட இப்பேர்ப்பட்ட தியாகம் செய்யப்பட்டிருக்க, இன்னமும் ஒரு பாவி கானாமற்போன நிலையிலே கெட்டுப் போவானேயாகில், தேவனுடைய அன்பையும்,



கிறிஸ்துவின் பலியையும் புரிந்து கொள்ளவில்லை என்று தான் பொருள். ஏதேன் தோட்டத்தில் விலக்கப்பட்ட கனியை மனிதன் புசிக்க முன்வந்த போது, தேவன் மனிதனுடைய சுதந்திரத்தில் தலையிட விரும்பாமல் இருந்ததைப் போலவே, மனிதனுடைய மீட்புக்காக சிந்தப்பட்ட கிறிஸ்துவின் ரத்தமாகிய தேவ கிருபையை இன்று ஏற்றுக்கொள்ளுமாறு மனிதனை தேவன் கட்டாயப்படுத்தமாட்டார். *''கிறிஸ்து, குமாரனாயிருந்தும் பட்ட பாடுகளினாலே கீழ்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணமான பின்பு, தமக்கு கீழ்ப்படிகிற யாவரும் நித்தியரட்சிப்பை அடைவதற்கு காரணராகி''* **(எபி 5:8)** என்று எபிரேயருக்கு எழுதிய ஆசிரியர் கூறுகின்றார்.

<u>தேவன் நீதியுள்ளவர்.</u> *''தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்''* என்று வேதத்தில் வாசிக்கிறோம். நீதி விளங்க வேண்டும் என்று தேவ நீதி கேட்கிறது. பாவத்தை தண்டியாமற்போனால் தேவன் எப்படி நீதிபரராயிருக்க முடியும். மனிதன் தீமை செய்யாதபடி அவனை கட்டுப்படுத்துகிற ஒருவழி, அவன் தண்டனை பெருவான் என்கிற உணர்வு. தேவனுடைய தயவும், அன்பும் நம்மை நெருக்கி ஏவுகிறது. அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்தபடியால், நாமும் ஒருவரிலொருவர் அன்பு கூற கற்றுக்கொள்கிறோம். சிலுவையின் ஈர்ப்பு சக்தியை பாருங்கள். *''நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டியிருக்கும் போது எல்லோரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்ளுவேன்''* என்றார் இயேசு, சிலரின் இருதயம் இன்னமும் இந்த அன்பின் தன்மையை ருசித்துப் பாராதபடிக்கு கடினமாக இருக்கிறது. 'கல்வாரியின் அன்பை கண்ட பின்னரும் கல்மனம் உருகலையோ' என்று ஒரு பக்தன் பாடி இருக்கிறான். அப்படிப்பட்ட கீழ்ப்படியாத பாவிக்கு தண்டனை காத்திருக்கிறது. நினிவே பட்டணம் 40 நாளைக்குள் அழிக்கப்படும் என்று யோனா பிரசங்கித்தான். இயேசு, 'கோராசீன் பட்டணமே, பெத்சாயிதா பட்டணமே, நியாயத்தீர்ப்பு நாளில் உனக்கு நேரிடுவதைப்பார்கிலும், தீரு, சீதோனுக்கு நேரிடுவது இலகுவாயிருக்கும்' என்கிறார். அத்தேனே பட்டணத்து மக்களைப்பார்த்து பவுல், மனந்திரும்புதலுக்கான அறை கூவலைவிட்டு: *''தேவன் ஒரு நாளைக் குறித்திருக்கிறார். அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்''* **(அப் 17:31)** என்றான்.

பவுல் தன் பிரசங்கத்தில்: *''தேவனுடைய தயவையும், கண்டிப்பையும் பார்''* என்றார். ஆதாமைப் பார்த்து தேவன், 'அந்த கனியை புசிக்க வேண்டாம், புசிக்கும் நாளிலே நீ சாகவே சாவாய்' என்றார். இன்றும் கூட அவர் தரும் எச்சரிக்கையாவது, பாவத்தின் சம்பளம் மரணம்'' என்பதே! தேவன் பாவிகளை தண்டிக்கவில்லை என்றால், அவர் எப்படி நீதிபரராக இருக்கமுடியும்? *''தேவன் தம்மை பரியாசம் பண்ணவொட்டார், மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்''* **(கலா 6:7)** என்ற மாற்ற முடியாத கொள்கையை ஒரு பாவி உணர்ந்தால், தேவ கிருபையை விருதாவாக எண்ணமாட்டான். ஆம்! மனந்திரும்பாத பாவிகள் காணமற்போன நிலையில் கெட்டுப்போனால், தேவ நீதி விளங்கிற்று என்று தான் பொருள். வாழ்க்கை என்பது ரோஜாப்பூ இதழ் மீது நடப்பதல்ல; பஞ்சணை மீது உறங்குவது அல்ல;

வாழ்க்கையில் எத்தனையோ முறை புயல் வீசப்பார்க்கிறோம். அடுத்த வேளை சோற்றுக்கு என்ன செய்வது என்று எண்ணிப்பார்க்கும் அவல நிலை. இதற்குள் வியாதி, விபத்துகளுடன் மரண பயம். இடையில் நம் அன்புக்கு பாத்திரமானவர்களால் வரும் இருதய நோவுகள். நம்மோடு உண்டு, அன்பை ருசித்து விட்டு, கேவலம் பணத்திற்காக நம்மை காட்டிக்கொடுத்து, நட்டாற்றில் விட்டுச்செல்லும் நயவஞ்சகர்கள் கூட்டத்தின் தொல்லை ஒரு புறம். நண்பன் போல் நடித்து, சமயம் வரும்போது பகைவனின் கைக்கூலியாக மாறும் சந்தர்ப்ப வாதிகளின் மாய்மாலம் இன்னொருபுறம், அவைகள் நடுவில் தான் நாம் ஜீவிக்க வேண்டி இருக்கிறது. எத்தனை போராட்டம்! எத்தனை துன்பம்! இப்படிப்பட்ட அனுபவங்கள் கூட நரகத்தின் பயங்கர நிலைமைக்கு முன்னால் ஒன்றுமில்லை. ஆகவே தான், ஒரு மனிதன்

இந்த “உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?” என்றார்.

கிறிஸ்து நரகத்தின் துன்ப வேதனையைப் போல் யாரும் எங்கும் அனுபவித்திருக்க முடியாது. அங்கே அழுகையும், பாழ்கடிப்பும் உண்டு. அநேகர் ஐசுவரியவானைப் போல், நான் அக்கினி ஜுவாலையில் வேதனைப்படுகிறேன் என்பார்கள். அங்கு செல்பவர்கள் ஆட்டுக்குட்டியானவரின் கோபத்திற்குள்ளாவார்கள். ஆகவேதான் கிறிஸ்துவும், இரண்டு கண்களோடு, இரண்டு கைகளோடு நரகத்திலே தள்ளப்படுவதைக் காட்டிலும் இடறல் உண்டாக்குகிற ஒரு கண்ணையோ, கையையோ, பிடுங்கிப்போடு என்றார். நரகம் அக்கினியும், கந்தகமும் எரிகிற கடல் என்றும், அங்கு இரவும் பகலும் இளைப்பாறுதல் இராது என்றும் வேதம் கூறுகிறது. அது மட்டுமா? பயங்கரதனிமை! அங்கே அநேகர் இருப்பார்கள். அவனவன் தன்தன் வாதைகளை சுமந்து கொண்டு வேதனைப்பட்டுக்கொண்டிருப்பான். மற்றவனைப்பற்றி எண்ணிப்பார்க்க ஏது நேரம் அவனுக்கு?

அந்த நரகத்தில், மனிதன் நித்தியமாக தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட்டிருப்பான். அந்த இடம் பிசாசுக்கும், அவன் தூதர்களுக்கும் ஆயத்தம் பண்ணப்பட்ட இடம். இன்னும் ஐயோ! என்ன செய்வேன்? என்று முந்தின நாட்களை எண்ணி குமுறவேண்டாம். கடந்த கால எண்ணங்கள், தவறிவிட்ட வாய்ப்புகள், வீணாய்க்களித்த நாட்கள் இவைகள் எல்லாம் மனிதனுடைய மனச்சாட்சியை சுக்கு நூறாக உடைக்கும். அங்கிருந்து யாரும் தப்பி வர இயலாது. அது மட்டுமா? அது நித்திய நரகம். அங்கே புழு சாகாமலும், அக்கினி அவியாமலும் இருக்கும். அந்த நினைப்பே நம்மை ஒரு உலுக்கு உலுக்கிவிட வில்லையா? “காணமற்போவது” என்பது மிகவும் பயங்கரம். இதிலிருந்து நம்மை காப்பாற்றத்தான் கிறிஸ்து மரித்தார். நம் பொருட்டு சிலுவை சுமந்தார்.

அன்புள்ள நண்பனே, அந்த பயங்கர நரகத்திற்கு நீ தப்பி, இன்ப பரலோகத்திற்கு உன்னை கொண்டு செல்ல, கிறிஸ்து அழைக்கிறார். இன்றே நீ அவரை ஏற்றுக்கொள்!

### தெரிந்து கொள்வோம் !

## மேலைநாட்டு அறிஞர்களின் தமிழ்ப்பணி

## பர்த்தலோமேயு சீகன்பால்க்
### (Bartholomaus Ziegenbalg)

- சீகன்பால்க் 1682 ஆம் ஆண்டு ஜுன் 20ஆம் நாள் ஜெர்மனியிலுள்ளபு ல்ஸ்னிட்ஸ் (Pulsnitz) என்னுமிடத்தில் பார்த்தலோமேயு - கேத்தரின் தம்பரியருக்கு மகனாகப் பிறந்தார்.
- 1706ம் ஆண்டு ஜுலை 9ம் நாள் இந்தியாவில் தமிழ்நாட்டின் கடற்பகுதியான தரங்கம்பாடியை வந்தடைந்தார். அவரின் வருகை டேனிஷ் கிழக்கிந்திய கம்பெனியின் கவர்னருக்கும், டேனிய போதகர்களுக்கும் அதிருப்தியை அளித்தது. அவர் கப்பலிலிருந்து கரை வந்து சேர மூன்று நாட்கள் படகுகள் கொடுக்கப்படவில்லை.
- சீகன், தன்னைச் சுற்றியிருந்த தொழிலாளர்களால் பேசப்படும், போர்ச்சுக்கீசையும் தமிழையும் கற்றார். 5,000 தமிழ் வார்த்தைகளைத் தெரிவு செய்து மனப்பாடம் செய்தார். கடற்கரை மணலில் விரலால் எழுதி தமிழ் எழுத்துக்களைப் பழகினார்.
- சீகன்பால்க், ஐரோப்பியர்களின் விடுகளிலும் தோட்டங்களிலும் எடுபிடி வேலை செய்த இந்தியர்களுக்காக, முதல் மிஷன் பாடசாலையையும் குழந்தைகள் இல்லத்தையும் நிறுவினார். சென்னை மற்றும் கடலூரில் பள்ளிக்கூடங்கள் நிறுவினார்.
- இந்தியாவிலேயே முதன் முதலில் மொழிபெயர்க்கப்பட்ட வேதாகமம் ‘தமிழ்’ வேதாகமமே! முதல் இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர் சீகன்பால்க் தான்.
- மொழிபெயர்ப்புப் பணியோடு சீகன்பால்க் சில நூல்களையும் எழுதினார். தென் இந்தியாவின் மதக் கொள்கைகள், பழக்க வழக்கங்கள், ஆசாரங்கள், இலக்கியங்கள், பாடல்கள் ஆகியவற்றைப் பற்றி ஜெர்மன் மொழியில் 44 அதிகாரங்கள் 332 பக்கங்கள் கொண்ட ஒரு புத்தகமும், தமிழ்நாட்டு தெய்வங்களின் பரம்பரையைப் பற்றிய ஒரு புத்தகமும் எழுதினார்.
- நீதி வெண்பா, கொன்றை வேந்தன், உலக நீதி என்ற புத்தகங்களை ஒன்று சேர்த்து ‘நானாவித நூல்கள்’ என்ற புத்தகத்தையும் ஆக்கினார். லத்தீன் மொழியில் தமிழ் இலக்கணம் (Grammatica Tamulica) எழுதினார்.
- தமிழ் - ஜெர்மன் அகராதியையும் சீகன் எழுதினார். சபையார் பாடுவதற்காகப் பல பாடல்களை மொழிபெயர்த்தார். ஐரோப்பிய ராகங்களுக்கு இசைந்த ஞானப்பாட்டுகளையும், தமிழ் ராகங்களுக்கு ஏற்ற கீர்த்தனைகளையும் இயற்றினார்.

தொடர் 7

# நியாயாதிபதிகள் மற்றும் ரூத்: கொந்தளிப்பின் மத்தியில் அன்பு

**வாசிக்க வேண்டிய அதிகாரங்கள்:**
**நியாயா.1–4, 6–16 ரூத் 1–4**

**தலைப்பு:**

நியாயாதிபதிகள் என்ற தலைப்பு, யோசுவா மரணத்திற்குப் பின்பு, தேவனால் எழுப்பப்பட்ட (2:16) இஸ்ரவேல் மக்களின் நடத்துனர்களில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது. இதற்குரிய கிரேக்க மொழித் தலைப்பானது, ''நீதிபதிகள்'' என்று மாத்திரம் அர்த்தப்படுத்துவதாயிருக்கலாம். ஆனால் இவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஒருக்காலும் எந்த ஒரு நீதிமன்றத்திலும் தலைமை வகித்திருந்ததில்லை. எபிரேய மொழியில் இந்தத் தலைப்பின் பொருள் மிகவும் விரிவானதாக உள்ளது. இது "நீதிபதிகள், ஆட்சியாளர்கள், விடுதலையாளர்கள்'' என்று அர்த்தப்படுகிறது.


ரூத் புத்தகத்தின் தலைப்பானது, அதன் முக்கியமான கதாபாத்திரத்தில் ஒருவரான, உண்மையான தேவனில் விசுவாசியான 'ரூத்' என்ற மோவாபியப் பெண்ணின் பெயரிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது.

**பின்னணி:**

நியாயாதிபதிகளின் காலம் கொந்தளிப்பின் காலமாக இருந்தது. யோசுவாவின் மரணத்திற்குப் பின்பு, மைய அரசு எதுவும் இருக்கவில்லை; *''அவனவன் தன்தன் பார்வைக்குச் சரியானபடி செய்துவந்தான்''* **(17:6: 18:1: 19:1: 21:25).**

அந்த நாட்டின் குடிகளை முற்றிலுமாகத் துரத்திவிடும்படி தேவன் இஸ்ரவேல் மக்களுக்குக் கூறியிருந்தார்; ஆனால் அவர்கள் அதைச் செய்யவில்லை **(1:21–36).** அவர்களிடையில் இருந்த புறதெய்வ ஜனங்களின் செல்வாக்கினால் இஸ்ரவேல் மக்கள் தேவனை விட்டுப் புறம்பே திரும்பினார்கள். அவர்கள் இதைச் செய்தபோது, மற்ற மக்களினங்கள் வந்து இஸ்ரவேல் மக்களை அடக்கியாளத் தேவன் அனுமதித்தார். அவர்கள் (இஸ்ரவேல் மக்கள்) மனந்திரும்பியபோது, தேவன் 'ஒரு விடுதலையாளரை' அதாவது, "ஒரு நியாயாதிபதியை" அனுப்பினார் **(2:16–19).** சற்றுக்காலம் மக்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருப்பார்கள்; பின்பு முன்கூறப்பட்ட செயல்கள் யாவும் திரும்பவும் நடைபெறும். மீண்டும் விழுந்துபோகுதல், தண்டனை பெறுதல், மனந்திரும்புதல் மற்றும் மீட்கப்படுதல் என்ற சுழற்சியானது திரும்பத் திரும்ப நடைபெற்றது.

நியாயாதிபதிகள் நாட்டை முழுவதும் ஆண்ட அரசர்களைப்போல் இருக்கவில்லை; மாறாக, அவர்கள் குறிப்பிட்ட தேவைகளுக்காகத் தேவனால் எழுப்பப்பட்ட உள்ளூர் விடுதலையாளர்களாய் இருந்தனர். அநேகமாக அவர்களின் ஊழியமானது ஒன்றின் மீது இன்னொன்று இணைந்திருந்தது.




ஒருவர் நியாயாதிபதிகளின் புத்தகத்தை வாசிக்கும்போது, நாட்டில் வன்முறை மாத்திரமே இருந்தது என்று கருத்து ஏற்படலாம்; ஆனால் ரூத் என்ற அமைதியும் இனிமையும் உடைய புத்தகமானது "நியாயாதிபதிகள் ஆண்ட நாட்களில்" நடைபெற்றதைக் குறிப்பதாக உள்ளது. கலகத்தின் மத்தியிலும் சாதாரண மக்கள் இன்னமும் தேவனுக்கு உண்மையுள்ள வாழ்வை வாழ்ந்து கொண்டிருந்தனர்.

தாவீது அரசனின் வம்சவழியை நிலைநாட்டுதல் **(4:21, 22)** மற்றும் நிறைவாக இயேசுவின் வம்சவழியை நிலைநாட்டுதல் **(மத்தேயு 1:5,6)** என்பது ரூத் புத்தகத்தின் அடிப்படை நோக்கமாகக் காணப்படுகிறது. இந்தப் புத்தகங்களை எழுதியது யார் என்று நாம் அறிவதில்லை; இஸ்ரவேல் மக்களின் கடைசி நியாயதிபதியான சாமுவேல் இவற்றை எழுதியிருக்கலாம் என்பது நல்ல யூகமாயிருக்கும்.

## நியாயதிபதிகள் புத்தகத்தின் வரைகுறிப்பு:

**பின்னணி :** இஸ்ரவேல் மக்கள் (கானான் நாட்டின்) குடிகளை முற்றிலுமாகத் துரத்தியிருக்கவில்லை; 1. இதனால் தேவன் அவர்கள் மீது பிரியமற்றுப் போனார் (2:1–5). கடும் தீமையான சுழற்சியொன்று தொடங்கிற்று (2:6–3:4).

I. முதல் சுழற்சி:

அ. விசுவாச விலக்கம் (3:5–7)

ஆ. மெசொப்பொத்தாமியர்களின் அடக்குமுறைக் கொடுமை (3:8)

இ. விடுவிக்கப்படுதல் : **ஒத்னியேல்** (3:9–11)

II. இரண்டாம் சுழற்சி :

அ. விசுவாச விலக்கம் (3:12)

ஆ. அம்மோனியர்கள் மற்றும் அமலேக்கியர்களுடன் சேர்ந்து மோவாபியர்களின் அடக்குமுறைக் கொடுமை (3:12–14)

இ. விடுவிக்கப்படுதல் : **ஏகூத்** (3:15–30).

III. மூன்றாம் சுழற்சி:

அ. அடக்குமுறைக் கொடுமை : **பெலிஸ்தர்கள்** (3:31).

ஆ. விடுவிப்பவர் : **சம்கார்** (3 :31).

IV. நான்காம் சுழற்சி:

அ. விசுவாச விலக்கம் (4:1)

ஆ. அடக்குமுறைக் கொடுமை : கானானியர்கள் (4:2,3).

இ. விடுவிப்பவர்கள் : தெபோராள் மற்றும் பாராக் (4:4–5:31).

V. ஐந்தாவது சுழற்சி:

அ. விசுவாச விலக்கம் (6:1)

ஆ. அடக்குமுறைக் கொடுமை : அமலேக்கியர்களுடன் சேர்ந்து மீதியானியர்கள் ( 6:1–10)

இ. விடுதலையாளர் : கிதியோன் (6:11,8:32).

ஈ. மீண்டும் விசுவாச விலக்கம் (8:33-35).

உ. அபகரிப்பாளன் : அபிமெலேக்கு (9).

ஊ. விடுதலையாளர்கள்: தோலா (10:1,2) மற்றும் யாயீர் (10:3-5)

VI. ஆறாம் சுழற்சி:

அ. விசுவாச விலக்கம் (10:6)

ஆ. அடக்குமுறைக் கொடுமை: பெலிஸ்தர்கள் மற்றும் அம்மோனியர்கள் (10:7–18).

இ. விடுதலையாளர்கள் : **யெப்தா** (11:1–12:7), **இப்சான்** (12:8–10). **ஏலோன்** (12:11,12), **மற்றும் அப்தோன்** (12:13–15).

VII. ஏழாம் சுழற்சி:

அ. விசுவாச விலக்கம் (13:1)

ஆ. அடக்குமுறைக் கொடுமை: பெலிஸ்தர்கள் (13:1)

இ. விடுதலையாளர்: **சிம்சோன்** (13:2–16:31)

பிறசேர்க்கை: ஒழுக்கச் சூழ்நிலை (17–21)

## ரூத்தின் சரித்திரம்: வரைகுறிப்பு

1. ரூத்தும், நகோமியும் ஒருவருக்கொருவர் கொண்ட அன்பு (1)

2. ரூத்தும், போவாசும் ஒருவர் மீது மற்றவர் கொண்டிருந்த அன்பு (2, 3)

3. இஸ்ரவேல் மக்கள் மற்றும் நம்மீது தேவனுடைய அன்பு (4)

## 'நியாயாதிபதிகள்' மற்றும் 'ரூத்தின் சரித்திரம்' என்ற புத்தகங்களில் இருந்து பாடங்கள்:

மனிதன் தேவனுடைய வழியைப் பின்பற்றுவதற்குப் பதிலாகத் தனது சொந்த வழியைப் பின்பற்றும்போது, குழப்பமே விளைகிறது. தேவன் தமது மக்களின் மத்தியில் பாவத்தை சகித்துக்கொண்டிருப்பதில்லை. நம்மைத் தட்டியெழுப்புவதற்காகத் தேவன் நம்மீது தண்டனையை அனுப்பலாம். நாம் மனந்திரும்பினால், தேவன் நம்மைத் திரும்பவும் ஏற்றுக்கொள்வார்.

நாம் உலகத்தில் மோசமான நிலையைக் கொண்டிருந்தாலும், நகோமி, ரூத் மற்றும் போவாசு ஆகியோர் செய்ததைப் போன்று, நாமும் நமது தேவனுக்கு உண்மை நிறைந்த வாழ்வை வாழ்ந்து, அதன்மூலம் நமது கடமையை நிறைவேற்ற முடியும்.

தேவன் உலகத்திற்கு இயேசுவைக் கொண்டுவருதல் என்ற தமது திட்டத்தைத் தொடர்ந்தார் என்பது மிகவும் முக்கியமானதாக உள்ளது.

வெளிப்படுத்தின விசேஷத்திலிருந்து ...

தொடர் 2

# நாம் முற்றிலும் வெற்றி கொள்ளுகிறவர்கள்!

## We are more than conquerers !

### முகவுரை

எந்த அணுகு முறையில் இதைப் படிக்க வேண்டும்? எந்த ஒரு செயலுக்கும் அணுகுமுறை முக்கியமானது. சரியான அணுகுமுறையில்லா எந்த முயற்சியும் பலன் தராது. தோல்வியில் தான் முடியும். குழப்பமான புத்தகம் என்று கருதப்படுகிற வெளிப்படுத்தின விசேஷப் புத்தகத்தை முறையான அணுகுமுறையில் ஆய்வு செய்தால் அறிவது எளிது. "நல்ல ஆரம்பம் பாதி வேலையை நிறைவு செய்தது போன்றது." கி.மு. 384-322ல் வாழ்ந்த கிரேக்க தத்துவஞானி அரிஸ்டாட்டில், மேற்குறித்த இந்தக் கருத்தை எழுதினார். (நன்றி : இன்றைக்கான சத்தியம், வெளி. பாகம் 1, பக்கம் 14, ஆசிரியர் டேவிட் ரோப்பர்).

ஒவ்வொரு அணுகுமுறையையும் கையாளும் போதும் இரண்டு விஷயங்களை மனதில் கொள்ள வேண்டும். (1) இந்தப் புத்தகம் எழுதப்பட்ட காலத்தில், அதற்கான பொருள் அன்று புரிந்த கொள்ள முடிந்தது. புத்தகத்தில் சொல்லப்பட்ட பெரும்பாலான நிகழ்வுகள் முதல் நூற்றாண்டில் "சீக்கிரத்தில்" சம்பவிக்க இருந்தவைகள். எனவே, இப்புத்தகத்தை அப்பொழுது வாசித்த ஒருவர் ''உபத்திரவப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு என்ன செய்திகளை கொண்டுள்ளது'' என புரிந்து கொண்டிருப்பார். (2) இப்போதைய கிறிஸ்தவர்களுக்கான உள்ள அர்த்தம் இதிலே இரண்டு கருத்துக்களாக உள்ளன. அவை, வெளி 1:3 ''இந்தத் தீர்க்க தரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளை கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள்". ''மேலும் கேட்கிறதற்கு காதுள்ளவன் கேட்கக்கடவன்'' என்றும் சொல்லப்படுகிறது" **(வெளி.2:7).** (3) இப்புத்தகம் கிறிஸ்தவ வரலாற்றுத் தத்துவங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. எல்லாவற்றையும் தேவன் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார், எனவே நீதிமான்கள் "முற்றிலும் ஜெயங்கொள்வார்கள்." (4) இதன் செய்தியில் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மையமாக இருக்கிறார் **(வெளி. 1:12, 13, 20: 5:2, 9-10: 12:5: 20:11).** திருமறையின் முழு செய்தியும் இதிலே நிறைவு பெறுகிறது. (5) உபத்திரவப்படும் சபைக்கு அவ்வப்பொழுது மிகுந்த ஆறுதலளிக்கும் புத்தகம் இது (உதாரணம் : **வெளி. 2:10**).

### பின்னணி :

1. இப்புத்தகத்தில் தேவ சித்தத்தின் வெளிப்பாடு, இலக்கிய வகையைச் சேர்ந்தது. தானியேல், எசேக்கியேல் மற்றும் சகரியா புத்தகத்தின் சில பகுதிகள் இவ்வகையைச் சேர்ந்தவை.

   மூன்று ஆசீர்வாதங்கள் மற்றும் இன்று உபத்திரவப்படுகிற கிறிஸ்தவர்களுக்கான ஆறுதல் இப்புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது (வெளி. 2:7, 10).

### அணுகுமுறை 1:

**கடைசி கால நிகழ்வு கண்ணோட்டம் :** எல்லாமே (குறைந்தபட்சம், பெரும்பாலான நிகழ்வுகள்) எதிர்காலத்தில், நீண்ட இடைவெளிக்குப் பிறகு நிறைவேறும் என்ற கண்ணோட்டத்தில் விளக்கமளிப்பது. அதாவது கிறிஸ்துவின் வருகையையொட்டி நிகழும் கடைசி கால சம்பவங்கள் என்ற கண்ணோட்டத்தில் விளக்கமளிப்பது இந்த அணுகுமுறை ஆகும். யூதர்கள் புறக்கணிக்கப்பட்ட பின் வெளி. அதிகாரம் **1-3**ல் சபையின் காலம்; அதிகாரம் **4-19**ல் எடுத்துக்கொள்ளப்படுதலும் 7 வருட உபத்திரவக்காலம் என்றும் இவர்கள் கூறுகின்றனர். இந்த வேளையில் யூதர்கள் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள் என்றும் இவர்கள் நம்புகின்றனர். **எரேமியா 19:1-3, 10-12**ன்படி சிதறடிக்கப்பட விருந்த யூதர்கள் ஒருபோதும் மறுபடியும் சேர்க்கப்பட போவதில்லை என்று முன்னுரைத்தார். பிறகு அதிகாரம் 20ல் இயேசு 1000 வருடம் பூமியில் அரசாளுவார் என்று சொல்லுவதாகப் போதிக்கின்றனர். **யோவான்**

18:35, 36ன் படி இதுவும் தவறான விளக்கம் என்பது தெளிவாகிறது. இவைகளை 20ஆம் அதிகாரத்துக்கு வரும்போது தெளிவாக காண்போம். மேலும் கொஞ்ச கால இடைவெளிக்குப் பின்பு நியாயத்தீர்ப்பும், அதிகாரங்கள் 21–22ல் நியாயத் தீர்ப்பைத் தொடர்ந்து வரும் நித்தியம் குறித்தும் பேசுகிறது என்கின்றனர்.

இருப்பினும் எல்லாமே எதிர்வரும் கடைசி கால நிகழ்வுகள் என்ற கண்ணோட்டத்தில் பார்ப்பவர்களுக்குள்ளாகவே வேறுபாடுகள் காணுகின்றன. இப்படிப்பட்ட அணுகுமுறையில் இருப்பவர்கள் தான் *''இயேசு சீக்கிரம் வருகிறார், மனந்திரும்புங்கள்''*என்று பிரசங்கிக்கின்றனர். இந்த அணுகுமுறையில் உள்ள பெலவீனம், எல்லாவற்றையும் நேரடிப் பொருளில் எடுத்துக் கொள்வது. *''வேதத்திலுள்ள எந்த தீர்க்கதரிசனமும் சுய தோற்றமான பொருளையுடையதல்ல''* என்றுபே பதுரு எழுதினார். **2 பேதுரு 1:21** 'சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவை' என்று கர்த்தர் சொன்னது எப்படி சில ஆயிரம் வருஷங்கள் கடந்து "கடைசி கால" வெளிப்பாடாகும் என்பது புரியவில்லை. "சீக்கிரம்" "சமீபம்" என்பது ஒரு சில வருட இடைவெளியில் என்பது தானே சரியாகப் பொருந்தும். பவுல் தீமோத்தேயுவினிடத்தில், ''நீ சீக்கிரமாய் என்னிடத்தில் வர ஜாக்கிரதைப் படு" என்றார். எத்தனை ஆயிரம் வருடங்கழித்து தீமோத்தேயு பவுலிடம் போயிருப்பார்? "தேவனுடைய ராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்று இயேசுவும் யோவானும் பிரசங்கித்தனர். அவர்கள் போதித்த 3½யிலிருந்து 4 ஆண்டுகளுக்குள்ளாகவே ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டது **(அப். 1:8–6: 2:1–4, 31–32, 47).**

இதே போல உருவகமாக, அடையாளமாக போதிக்கப்படுவது வெளிப்படுத்தின விசேஷத்தில் மட்டுமல்ல. யோவான் **10:9ல்** இயேசு "வாசல்" என்றும், **15:1ல்** இயேசு "நான் மெய்யான திராட்ச செடி" என்றும் சொல்லுகிறார். எனவே, இந்த அணுகுமுறை பெலவீனமானது.

## அணுகுமுறை 2:

### எல்லாமே கடந்த கால நிகழ்வுகள்:

எதுவுமே இனிமேல் நடப்பவையல்ல என்ற கண்ணோட்டம். வெளிப்படுத்தின விசேஷம் எழுதப்பட்டபோது, ஏற்கனவே நடந்து முடிந்த நிகழ்வுகளை நினைவூட்டுதலாக முதல் நூற்றாண்டு சபைக்கு எழுதப்பட்டது என்று விளக்கம் கொடுப்பார்கள். மேசியாவின் வருகை, சபையின் ஸ்தாபிதம், எருசலேமின் அழிவு போன்றவை உதாரணமாக காட்டப்படுகிறது. எனவே, இது மறுதிருப்புதல் என்னும் கண்ணோட்டத்தைக் கொண்ட, கி.பி. 70ன் கோட்பாடு என்ற பெயரில் சில தவறுகளைப் போதிக்கின்றனர். இதன் மையப் போதனை கி.பி. 70ல் தீத்துராயனால் எருசலேம் அழிக்கப்பட்டது. அப்பொழுது இயேசு கிறிஸ்து இரண்டாம் முறை வந்துவிட்டார் என்கின்றனர். இந்த கள்ள உபதேசம் ஒரு தனிநபரால் கொண்டு வரப்பட்ட உபதேசம். இந்த தவறான உபதேசத்தால் கர்த்தருடைய சபை ஆங்காங்கே வெகுவாய் பாதிக்கப்பட்டுள்ளது என்பது உண்மை.

இந்த கடந்த கால கண்ணோட்ட அணுகுமுறை வரலாற்றுச் சூழலை விவரித்து முதல் நூற்றாண்டு காட்சியைக் காட்டுகிறது. முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களுக்கு சிறப்பான செய்தியையும் கொடுக்கிறது. பலமிழந்து காணப்பட்ட ரோம அரசு வீழ்ச்சியடைந்தது; தேவனுடைய வெற்றியால் கிறிஸ்தவர்கள் முற்றிலும் வெற்றிகொண்டனர், என்று போதிக்கும் இவர்கள், வெளிப்படுத்தின விசேஷத்தின் அனைத்து செய்திகளும் முதல்



நூற்றாண்டிலேயே நிறைவேறிவிட்டன என்கின்றனர். அப்படியிருந்திருக்குமானால், இன்று வெளிப்படுத்தின விசேஷத்தில் ஒரு அளவிடப்பட்ட செய்தியை மட்டுமே கொண்டதாக இருக்கக்கூடும். மேலும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை குறித்த நிகழ்ச்சிகளை "தெளிவாக" வெளிப்படுத்தின விசேஷம் குறிப்பிடுவது பொய்யாகிவிடும்.

எனவே, எல்லாம் எதிர்கால (கடைசி கால) செய்தி என்பது போலவே, எல்லாம் நடந்து முடிந்த செய்தி என்பதும் தவறான கண்ணோட்டம்.

### அணுகுமுறை 3 :

#### தொடர் நிகழ்வு கண்ணோட்டம் :

இக்கண்ணோட்டம் ஏறத்தாழ ஒரு சமூக அறிவியல் படிப்பது போன்றது. பல உலக சரித்திரங்களை பேசும் இக்கண்ணோட்டம் வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்பட்ட கருத்துக்களை கொண்டுபோய் அந்த சரித்திரத்துடன் ஒப்பிடுகின்றன. இதினால் உபத்திரவத்திற்குள்ளான முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களுக்கு எவ்வளவு ஆறுதல் கிடைத்திருக்கக்கூடும்? தேவைப்பட்டாலொழிய உலக வரலாறு அனைத்தும் எவ்வகையில் பொருந்தும்? கத்தோலிக்க சபையின் தோற்றத்தையும், மார்டின் லூதரின் எதிர்ப்பும், புராட்டஸ்டண்ட் சபையின் தோற்றமும் இந்த வரலாற்றுக் கண்ணோட்டத்தில் கொண்டு வரப்படுகின்றன. வரலாறு உண்மையாயினும் வெளிப்படுத்தின விசேஷத்துடன் ஒப்பிடுவது சரியாகத் தோன்றவில்லை, பொருந்துவதாயுமில்லை.

எனவே இந்த அணுகுமுறையும் சரியானதாய்க் காணவில்லை.

### அணுகுமுறை 4 :

#### இறைமை இயல் ஆய்வு அணுகுமுறை :

இந்த அணுகுமுறைக்கு பல பெயர்கள் உண்டு. அவை வரலாற்றுத் தத்துவக் கண்ணோட்டம், நாடகக் கலைக் கண்ணோட்டம், சரியான நோக்கங்களை ஆதரிப்போரின் கண்ணோட்டம் தீர்க்கதரிசன கோட்பாட்டுக் கண்ணோட்டம் ஆவிக்குரிய கல்வி கண்ணோட்டம், கால வரையற்ற கருத்துக் கணிப்புக் கண்ணோட்டம் ஆகியன. எப்பெயரில் இது அழைக்கப்பட்டாலும் இது சாலச்சிறந்த கண்ணோட்டம் என நம்புகிறோம். ஏனெனில் இதிலே வசனத்தை மீறும் ஆபத்து மிகவும் குறைவு. இந்த விரிவுரையாளர்களின் விளக்கம் முதல் நூற்றாண்டுக்கும் பொருந்தும் இன்றைக்கும் பொருந்தும். உதாரணமாக, **வெளி. 17:18**ல் பேசப்படும் பெரிய நகரம், வேசி, பூமியின் ராஜாக்கள் மேல் ஆளுகை செய்தல், ரோம நகரத்தையும் ரோம அரசையும், அந்நகரத்தில் இருந்த ஏழு மலைகளையும் **(வச. 19)** குறிப்பிடுகிறது போன்ற விளக்கங்கள் மிகவும் பொருத்தமானவை. ஆகவே இந்த அணுகுமுறை ஏற்புடையதாக உள்ளது.

(தொடரும்...)


## *வாசகர்கள் கவனத்திற்கு*

வாசகர்களே! உங்கள் வேண்டுகோளுக்கிணங்க, வங்கியின் மூலம் நமது இதழுக்கான சந்தாவையும், சிறப்பு புத்தகங்களுக்கான தொகையையும் செலுத்த கீழே உள்ள விபரங்களை கவனிக்கவும்.

| | | |
|---|---|---|
| Account Name | : | **KIRUBAIYULLA VARTHAI** |
| A/c No. | : | **57022317422** |
| Bank Name | : | **STATE BANK OF TRAVANCORE** |
| Branch | : | **PONMENI BRANCH, MADURAI** |
| IFSC Code | : | **SBTR0000704** |

பணத்தை அனுப்பிய பின் 92 4421 4421 என்ற எண்ணுக்கு தகவல் தெரிவிக்கவும்.

உங்களது ஒத்துழைப்பிற்கு நன்றி !

பாடம் 1

# நோவாவின் குடும்பம்

சிறுவர் பகுதி

ஹாய் செல்லங்களா! அக்கா உங்களுக்கு இந்த மாதம், நம்மை படைத்த தேவனுக்கு பிரியமாக வாழ்ந்த ஒரு குடும்பத்தை பற்றி சொல்லப்போறேன்; நீங்க எல்லாரும் ஆயத்தம் தானே?

தேவன், இந்த உலகத்தையும் மனிதர்களையும் படைத்தார்; அவர்கள் பலுகி பெருகி திரளானவர்களான போது, அவர்களோடே சேர்ந்து பாவமும் பெருகிற்று; எல்லாரும் தேவனுக்கு பயப்படாமல், தங்கள் விருப்பினபடி மோசமான வாழ்க்கை வாழ்ந்தனர். தேவன் மிகவும் பிரியப்பட்டு படைத்த மனிதர்கள், இப்படி வாழ்வதை பார்த்த தேவன் மிகவும் வேதனைப்பட்டார். ஆகையால், இந்த உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் தண்ணீராலே (ஜலத்தினாலே) அழிக்க விரும்பினார்.



ஆனால் இந்த மோசமான மக்கள் நடுவிலே நோவா என்றவரும் அவர் குடும்பத்தனரும் தேவனுக்கு பயந்து, அவருக்கு பிரியமான வாழ்க்கை வாழ்ந்ததினால், தேவன் அவர்களை காப்பாற்றவும், மற்றவர்கள் அனைவரையும் அழிக்கவும் முடிவெடுத்து, நோவாவிடம் ஒரு பெரிய பேழையை (கப்பலை) கட்டச் சொன்னார். நோவாவும், அவர் வீட்டாரும் தேவன் சொன்ன அளவின் படியே, தேவன் சொன்ன மாடல் (விதம்) படியே, தேவன் சொன்ன மரத்தினாலே ஒரு பேழையை கட்டினார்கள்.

நோவா இந்த பேழையை கட்ட ஏறக்குறைய 100 வருஷம் ஆயிற்று. அவர் பேழையை கட்டிக்கொண்டே, தவறான வாழ்க்கை வாழ்ந்த மக்களை மனந்திரும்பும்படி போதித்தார். எல்லாரும் அவர் பேசுவதைக் கேட்டு, கேலி செய்தனர்; தவிர ஒருத்தர்கூட மனந்திரும்பவில்லை.

தேவன், பூமியின் மேல் நாற்பது நாள் இரவும் பகலும் மழையை பெய்ய வைத்து, பாவ வாழ்க்கை வாழ்ந்த எல்லா மக்களையும் அழித்து, தனக்கு பயந்து, தான் விரும்பினபடி வாழ்ந்த நோவாவையும் அவர் குடும்பத்தையும் பத்திரமாக பாதுகாத்தார்.

செல்லங்களா, கவனித்தீர்களா! தேவனுக்கு பயந்து அவருக்கு பிரியமாக வாழ்கிறவர்கள் யாராயிருந்தாலும் தேவன் அவர்களை நிச்சயமாக காப்பாற்றுவார். அதற்கு சிறந்த உதாரணம் தான் நோவாவும் அவர் குடும்பமும். நாமும் நோவா போலவும், அவர் குடும்பத்தார் போலவும் முழுக்குடும்பமாக கர்த்தருக்கு பிரியமாக வாழ்வோம்! நோவாவின் குடும்த்தை பாதுகாத்த கர்த்தர் நம்மையும் குடும்பமாக பாதுகாப்பார்!

**மனன வசனம் : சங் 115:11** *“கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களே, கர்த்தரை நம்புங்கள்; அவரே அவர்களுக்குத் துணையும் அவர்களுக்குக் கேடகமுமாயிருக்கிறார்.”*

உங்கள் அக்கா
**பிரியா ஆண்டனி**

---

பாடம் 2

# லோத்தின் குடும்பம்

சிறுவர் பகுதி

கடவுளின் செல்லப் பிள்ளைகளா! உங்கள் யாவரையும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன்.

எல்லாரும் சந்தோஷமாக இருக்கிறீர்களா? இந்த சந்தோஷத்தோடே ஒரு அருமையான பைபிள் சம்பவத்தை படிக்கலாமா?

சோதோம், கொமோரா என்னும் பட்டணங்கள் இருந்தது. அந்தப் பட்டணத்தில் லோத் என்பவர் தன் குடும்பமாக கடவுளுக்கு பயந்து வாழ்ந்து கொண்டிருந்தார். ஆனால் அந்த பட்டணத்தைச் சேர்ந்தவர்கள் கடவுளுக்கு விரோதமாக பாவம் செய்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது இரண்டு

தேவதூதர்கள் வந்து லோத்துவையும் அவன் குடும்பத்தையும் நோக்கி: தேவன் இந்தப் பட்டணத்தை அழிக்கப் போகிறார், எனவே நீயும் உன் குடும்பமும் தூரத்தில் உள்ள மலைகளுக்கு போய்விடுங்கள் என்றனர். லோத்தும் அவன் குடும்பத்தாரும் தாமதித்துக் கொண்டிருந்ததினால், தேவதூதர்களே அவர்கள் கைகளைப் பிடித்து அழைத்துக்கொண்டு, பட்டணத்திற்கு வெளியே போய்விட்டனர்.



மேலும் தேவதூதர்கள் அவர்களை நோக்கி: நீங்கள் தூரத்திலுள்ள மலைகளுக்கு ஓடிப்போங்கள் என்றார்கள். லோத்தோ தங்களால் அவ்வளவு தூரம் போக முடியாது, ஆகையால் பக்கத்தில் உள்ள சின்ன ஊருக்கு போகிறோம் என்றார்கள். தேவதூதர்களோ: சரி, ஆனால் நீங்கள் திரும்பி பார்க்காமல் போங்கள் என்று சொன்னார்கள். லோத்தும் அவரது 2 மகள்களும் திரும்பி பார்க்காமல் போனார்கள். ஆனால் லோத்தின் மனைவியோ திரும்பி பார்த்தாள்.

உடனே என்ன ஆனது தெரியுமா? அவள் அப்படியே உப்புத்தூண் ஆனாள்.

கடவுளின் செல்லங்களா ! நாம் குடும்பமாக தேவனுக்கு கீழ்படிந்து வாழும்போது, தேவன் நம்மை காப்பாற்றுவார். கீழ்ப்படியாதபோது, லோத்தின் மனைவியை போல தண்டிக்கப்படுவோம். எனவே நீங்களும் உங்கள் அம்மா அப்பாவுக்கு கீழ்படிந்து, முழுக்குடும்பமாக கடவுளுக்கு பிரியமாக இருங்கள். தேவன் நம்மை குடும்பமாக பாதுகாத்து, ஆசீர்வாதமாக வைப்பார்.

**மனன வசனம்: கொலே 3:1—2**

*நீங்கள் கிறிஸ்துவுடன் கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்.*

**– அன்பு ஏசுதாஸ். எஸ்.**

---

பாடம் **3**

# யோசுவாவின் குடும்பம்

சிறுவர் பகுதி

ஹாய் குட்டீஸ் ! எப்படி இருக்கீங்க? விடுமுறை நாட்களை மிகவும் பயனுள்ளதாக பயன் படுத்தினீங்களா? சரி குட்டீஸ், நாம் இந்த மாதம் யோசுவா என்பவரையும் அவரது குடும்பத்தையும் பற்றி தெரிஞ்சுக்கலாமா?



கர்த்தருடைய தாசனாகிய மோசேக்கு பிறகு, இஸ்ரவேல் ஜனங்களை யோசுவா என்பவர் வழிநடத்தி வந்தார். அவர் தான் இஸ்ரவேல் ஜனங்களை கானான் தேசத்திற்குள் அழைத்துக்கொண்டு போய், அந்த தேசத்தை அவர்களுக்கு பங்கிட்டு கெடுத்தார். தேவனை ஆராதிக்கவே எகிப்திலிருந்து கானான் தேசத்திற்கு அழைத்து வரப்பட்டனர். ஆனால், இஸ்ரவேல் மக்கள் அதை மறந்துவிட்டு. தங்களை சுற்றியிருந்த மக்கள் வணங்கின சிலைகளை வணங்க ஆரம்பித்தார்கள்.

இதனை கண்ட யோசுவா மிகவும் வேதனைபட்டு, நம்மை அழைத்த தேவன் உருவமில்லாதவர்; அவரை விட்டுவிட்டு நீங்கள் ஏன் விக்கிரங்களை வழிபடுகிறீர்கள்? இது மிகப்பெரிய பாவம்! நானும் என் குடும்பமும் கர்த்தரை மட்டும் தான் சேவிப்போம். நீங்களும் இந்த சிலைகளை எல்லாம் தூக்கிப்போட்டு விட்டு, நம்மை படைத்த உயிருள்ள தேவனை வணங்குங்கள்

என்றார். உடனே இஸ்ரவேலர்கள் அந்த சிலைகளையெல்லாம் தங்களை விட்டு அகற்றிவிட்டு, யோசுவாவின் குடும்பத்தைப் போல, கர்த்தரை மட்டும் ஆராதித்தார்கள். ஆகையால் தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்.

குட்டீஸ்! நம்மை படைத்த தேவன் உருவமில்லாதவர், அவர் சர்வ வல்லவர். நாம் அவரை மட்டும் தான் வழிபட வேண்டும். நம்மை சுற்றியுள்ளவர்களைப் போல் படங்களையும், சிலைகளையும் வழிபடக்கூடாது. அப்பொழுது யோசுவாவின் குடும்பத்தைப் போல் தேவனால் ஆசீர்வதிக்கப்படுவோம்.

**மனன வசனம்: 1யோ 5:21**

*"பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக்கொள்வீர்களாக. ஆமென்"*

**– குயினி பிலேமோன்**

பாடம் 4

# சிறைச்சாலை அதிகாரி குடும்பம்

சிறுவர் பகுதி

டியர் குட்டீஸ் ! நல்லா இருக்கீங்களா? இன்று நாம் குடும்பத்தோடே இரட்சிக்கப்பட்ட சிறைச்சாலை அதிகாரி பற்றி தெரிஞ்சுக்கலாமா?

பவுல் என்பவர் ஒவ்வொரு ஊராக சென்று, இயேசுவை பற்றி போதித்துக் கொண்டு வந்தார். ஒருமுறை பிலிப்பி என்ற பட்டணத்திலே இயேசுவைப் பற்றி போதித்தார். அந்த ஊரில் குறிச்சொல்லுகிற கெட்ட ஆவி பிடித்த ஒரு பெண் இருந்தாள். அவளிடமிருந்த கெட்ட ஆவியை பவுல் இயேசுவின் நாமத்தினாலே துரத்திவிட்டார். இது அவளை வைத்து பணம் சம்பாதித்த முதலாளிக்கு பிடிக்கவில்லை. அவர்கள் அந்த பட்டணத்து மக்களை தூண்டிவிட்டு, பவுலையும் அவருடன் ஊழியம் செய்த சீலா என்பவரையும் அடித்து, உடைகளை கிழித்து, அவர்களை சிறைச்சாலையிலே போட வைத்தனர்.

சிறைச்சாலை அதிகாரி பவுலையும், சீலாவையும் தொழு மரத்திலே தலைகீழாக கட்டி தொங்க விட்டிருந்தான். குட்டீஸ் ! உங்களை யாராவது இப்படி பண்ணியிருந்தா நீங்க என்ன பண்ணுவீங்க? அழுவீங்க தானே? ஆனால், பவுலும் சீலாவும் என்ன செய்தார்கள் தெரியுமா? நடு ராத்திரியிலே ஜெபம் பண்ணி, தேவனை துதித்துப் பாடினார்கள். காவலில் இருந்த மற்றவர்கள் அதைக் கேட்டனர். அப்பொழுது, திடீரென சிறைச்சாலையே அசையும்படியாக பூமியதிர்ச்சி வந்தது. சிறைச்சாலை கதவு எல்லாம் திறந்தது. எல்லாருடைய கட்டுகளும் கழன்றன.



சிறைச்சாலை அதிகாரி, சிறைச்சாலை கதவு திறந்திருந்ததினால், கைதிகள் அனைவரும் தப்பிவிட்டனர் என எண்ணி, தன்னை கத்தியை எடுத்து தன்னை தானே கொலை செய்ய பார்த்தான். பவுல் அவனை தடுத்து நிறுத்தி, உனக்கு தீமை ஒன்றும் செய்யாதே என்றார். மேலும், அவன் அவர்களுடைய காயங்களை கழுவினான். பவுல் அவனுக்கும், அவன் குடும்பத்தினருக்கும் வசனத்தை போதித்தார்.

அந்த ராத்திரி நேரத்திலேயே சிறைச்சாலை அதிகாரி தன் குடும்பத்தினருடன் கர்த்தருடைய வசனத்திற்கு ஞானஸ்நானம் பெற்ற கீழ்படிந்தார்.

குட்டீஸ் ! கவனித்தீர்களா? சிறைச்சாலை அதிகாரியும், அவர் குடும்பமும் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதை தள்ளிப்போடாமல், நடுராத்திரியிலே கீழ்ப்படிந்தனர். நாமும் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதை தள்ளிப்பபோடாமல் உடனே கீழ்படியனும். அப்படி கீழ்படிகிற உங்களை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக!

**மனன வசனம் : அப் 22 :16**

*“இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுக்கொண்டு, ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போக கழுவப்படு என்றான்.”*

**– அன்னம் ராஜா**



## ஜெபியுங்கள்

கர்நாடகா, கேரளா, ஆந்திரா மற்றும் புதுச்சேரி மாநிலங்களில் மாதந்தோறும் நடைபெறும் JC பள்ளியின் ஆத்தும ஆதாய பயிற்சி வகுப்புகளுக்காகவும், பயிற்சி அளிக்கும் நமது ஆசிரியருக்காகவும், அறியப்படாதவர்களுக்கு சத்தியத்தை அறிவிக்க ஆத்தும ஆதாய வீரர்களாகிய ஞானிகள் எழும்பவும் தினமும் ஜெபியுங்கள்.



## Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 6.45 - 7.00 a.m (TAMILNADU Contact Mobile : ***92 4421 4421 & 92 4431 4431***) ***Puthuyugam TV :*** *Every Tuesday 6 :15 a.m.*

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Tamilan TV & Radio :** TV : Every Monday 6.00 - 6.15 a.m. and Every Saturday 6.15 - 6.30 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV:** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel.

(KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel. (NEW DELHI Contact Mobile : 098108 96789)

# இம்மாதக் கேள்விகள் ?

1. தேவன் எப்பொழுதெல்லாம் பிள்ளைகளுக்கு கருத்தாய் போதிக்க சொல்கிறார் ?
2. "ஜீவனும் வல்லமையும் உள்ளதாய் இருக்கிறது" அது என்ன?
3. தேவன் எவைகளை 'நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்' என்கிறார் ?
4. 'உங்கள் இருதய கடினத்தினிமித்தம் மோசே இடங்கொடுத்தார்' என இயேசு சொன்னது என்ன?
5. வேசித்தனம் இராதபடிக்கு எதை உடையவர்களாக இருக்க வேண்டும் என்கிறார் பவுல் ?
6. தேவன் ஒரு நாளைக் குறித்திருக்கிறார், ஏன் ?
7. "அவனவன் தன்தன் பார்வைக்குச் சரியானபடி செய்து வந்தான்" என வாசிப்பது எங்கே ?
8. எதை வாசிக்கிறவர்களும், கேட்கிறவர்களும், கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள்?
9. சுயதோற்றமான பொருளை உடையதாயிராது, அது எது?
10. தேவன் "நீ எவைகளை நமஸ்கரிக்கவும், சேவிக்கவும் கூடாது" என்கிறார் ?

# சிறுவர்க்கான கேள்விகள்

1. தேவன் படைத்த மனிதர்கள் பலுகி பெருகின போது என்ன செய்தார்கள் ?
2. அக்காலத்திலே நோவாவும் அவர் குடும்பமும் எப்படி வாழ்ந்தனர் ?
3. உப்புத்தூண் ஆனாது யார்? ஏன் அப்படி ஆனார் ?
4. யோசுவா எவைகளை வழிபடக்கூடாது என்றார் ?
5. யோசுவா, தானும் தன் குடும்பத்தினரும் யாரை சேவிப்போம் என்றார் ?
6. சிறைச்சாலை அதிகாரியின் குடும்பம் வசனத்திற்கு கீழ்படிந்தது எப்பொழுது ?
7. இந்த மாத சிறுவர் பகுதி பாடங்களிலிருந்து நீ கற்றுக்கொண்டது என்ன?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 5-11-2015**

அனுப்ப வேண்டிய முகவரி : சகோதரி. **பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல்: 92 4421 4421, 92 4431 4431

## சென்ற மாத பதில்கள்

| | | |
|---|---|---|
| 1. 2 தீமோ 3 : 15 | 2. 1 பேதுரு 2 : 21 | 3. யாக் 3 : 2 |
| 4. சங் 141 : 5 | 5. எபி 12 : 11 | 6. அப் 12 : 23 |
| 7. அப் 22 : 16 | 8. அப் 2 : 38 | |
| 9. 1 கொரி 14 : 33 | 10. 1 கொரி 3 : 9 | |

## செப்டம்பர் மாதம் பதில் எழுதியவர்கள்

1. Mrs. குளோரி பால்ராஜ் – தஞ்சை
2. Mrs. J. ரேச்சல் தமிழரசி – மதுரை
3. Mr. M. லாரன்ஸ் கோபி – வேப்பங்கனேரி
4. Mrs. G. சரிதா கோபி – வேப்பங்கனேரி
5. Mrs. G. ஏஞ்சலம்மாள் – வளர்நகர்
6. Mr. J. விஜய் – வளர்நகர்
7. Mrs. R. சரோஜா – தென்கலம்
8. Mr. K. மோகன் – குமாரபாளையம்
9. Mrs. ரூபி ஜெபராஜ் – மதுரை
10. Dr. D.S. ஜெபநேசன் – திண்டுக்கல்
11. J. ஜோசப் – கோவில்பட்டி
12. S.M. தவமணி தேவி – திருப்பூர்
13. Mrs. சுகந்தி ஜோன்ஸ் – திருச்சி
14. A. ரோஸ்மேரி – சென்னை
15. Mrs. பியூலா ஜேசுராஜன் – புதுச்சேரி
16. R. பால் ஜெயராஜ் – சென்னை
17. Mrs. ஹெலன் திலக் – மதுரை
18. G. பீற்றர் பால்ராஜ் – தூத்துக்குடி
19. Mrs. ஜெயமணி ஜெயபாண்டியன் – கடலூர்
20. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு – செங்கல்பட்டு
21. Mrs. மேரி ராஜ் – மதுரை
22. Mrs. M. ஈஸ்வரி – கரூர்
23. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
24. J. செல்வி ஜெயராஜ் – நாமக்கல்
25. Mrs. J. கஸ்தூரி கலாவதி – மதுரை
26. Mr. ஆனந்த கதிரோன் – சென்னை
27. Mrs. கேத்ரின் அருள்நேசம் – மதுரை
28. C. பூபதி லாரன்ஸ் – ஆவரம்பாளையம்
29. S. ஜான்ஸி பாலன் – சென்னை
30. Mrs. சாந்தி ராஜன் – பாளையங்கோட்டை
31. R. மரிய ஜோசப் – முடிச்சூர்
32. Mrs. கிறிஸ்டி ஜோசப் – திருவள்ளூர்
33. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
34. Mrs. சாந்தா ஜெயக்குமார் – சென்னை
35. Mrs. G. புஸ்பா ஜேம்ஸ் – விருதுநகர்
36. V. வீரராகவன் – கரூர்
37. Mrs. ஷீலா ரிச்சர்ட் தாஸ் – சென்னை
38. I. அலெக்சாண்டர் சாலமோன் – சிவகங்கை
39. P. சூரியபிரியா – திருமங்கலம்
40. Mrs. P. இந்திராபாண்டி – திருமங்கலம்
41. P. சௌந்தர் பாண்டி – திருமங்கலம்
42. Mrs. பிலோமினா பிரபாகரன் – காரைக்கால்
43. M. புஷ்பராணி – நாமக்கல்
44. J. திலக் தானியேல் – சென்னை
45. M. அரவிந்த் – கோவை
46. Mrs. காந்தா மனோகரன்– திருச்சி

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. G. பிரசன்னா பிளஸ்ஸி – வேப்பங்கனேரி
2. A. கெனித்சாம் பெஞ்சமின் – மதுரை
3. M. வின்சென்ட் – கோவை
4. I. ஷீபா பிரியதர்ஷினி – சிவகங்கை

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

# JC ஆத்தும ஆதாயப் பயிற்சி பள்ளியின் 6வது பட்டமளிப்பு விழா (திண்டுக்கல்)



18 மாத ஆத்தும ஆதாய பயிற்சியை முடித்து, பட்டய சான்றிதழ்களை பெற்ற 25 மாணவர்கள்



ஆத்தும ஆதாய பணி மற்றும் சபை பணிகளில் சிறப்பாக செயல்பட்ட மாணவர்களுக்கு நினைவு பரிசு வழங்கப்பட்டது



பெண்களுக்கான சிறப்பு வகுப்பு நடத்திய சகோதரி Paula Bates



ஆசிரியரின் TV செய்திகள் அடங்கிய சிறப்பு பிரசங்க குறிப்புகள் புத்தகம் வெளியிடப்பட்டது



பட்டமளிப்பு விழா கூட்டத்தில் பங்குபெற்றோர்...



திருமுழுக்கு பெற்ற வாலிபர்கள்

Owned, Published & Edited by **P.C. PHILEMON RAJAH**
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2015-2017
Posted at Arasaradi HPO on 10th, 11th October 2015



சென்னையில் நடைபெற்ற ஊழியர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி கூட்டத்தில் நமது ஆசிரியர் மற்றும் போதகர் V.S. இமானுயேல் ஆகியோர் ஆலோசனை வழங்கிய போது...



மாதந்தோறும் பார்வையற்றோருக்கு அரிசி வழங்கப்படுகிறது



நாகர்கோவில் அருகே கருங்கல்லில், பார்வையற்ற பள்ளி மாணவர்களுக்கு வேதாகம ஆலோசனை, ப்ரெயில் மொழியில் பைபிள் பாடங்கள் மற்றும் MP3 ஆடியோ பைபிள் ஆகியவை இலவசமாக வழங்கப்பட்டது



கோவில்பட்டியில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் சகோ. கிங்ஸ்லி ராஜா, சகோ. ஆண்டனி ராஜா மற்றும் சகோ. குணசேகரன் ஆகியோர் செய்தி அளித்த போது...

**If undelivered please return to :**

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us facebook NT Gospel Restorers